# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.698/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரவிந்திரன் | த-பெ | சுந்தரபாண்டி |
| ஊர்: | : | தேனி | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் வருசநாடு காவல் நிலையம் | மாவட்டம் | தேனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சி தேனி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளிக்கிறார்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தேனியில் வசித்து வருசநாடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு செட்டிநாடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக 2017 ம் வருடம் பணியில் இருந்தபோது குன்றக்குடி சர்க்குல் நிலைய ஆய்வாளராக கூடுதல் பணியாற்றி வந்த நிலையில் நிலைய சார்பு ஆய்வாளர் சக்தி என்பவர் பதிவு செய்த வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் இவ்வழக்கின் முதல் கட்ட விசாரணையை சக்தி என்பவர் நிறைவு செய்திருந்தார். **புகார் அசாஆ 6**.

24.07.2017 அன்று 12.00 மணிக்கு நிலையம் ஆஜர் ஆன வழக்கின் எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் பிரேத பரிசோதணைக்கு உதவியாக இருந்த காவலர் ராமசந்திரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்து வழக்கில் தொடர்புடைய வாகனங்களை விபத்தாய்விற்காக ராஜேஷ் மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் ஒப்படைத்து அவரிடம் இருந்து வாகன ஆய்வறிக்கைகள் பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வாகன ஆய்வறிக்கைகள் முறையே அசாஆ 7 மற்றும் அசாஆ 8**. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பிரபாவதி என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டியல் சாட்சிகள் 8 முதல் 11 வரையிலானவர்களை விசாரணை செய்து 02.08.2017 அன்று விசாரணையை நிறைவு செய்து 304A ன் அடிப்படையில் எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கின் புகார்தாரர் யார் என்றால் பாண்டியன். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை

நான் விசாரணை செய்யவில்லை என்றால் அவர்கள் சார்பு ஆய்வாளரிடம் சொன்னதை போலவே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கின் சாட்சி முருகானந்தம் எங்கிருந்து சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளார் என்றால் நேமத்தான்பட்டி மாணிக்க வாசகர் தெருவிற்கு அருகில் உள்ள சந்து. எந்த திசை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆகையால் அவர் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் பெயர் மற்றும் முகவரி யாரிடம் இருந்து தெரிந்து கொண்டதாக விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அருகில் இருந்தவர்களை அந்த ஊர்காரர்களையும் விசாரணை செய்து தெரிந்து கொண்டேன். சாட்சிகளின் பெயர் மற்றும் முகவரிகள் எதுவும் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ள நபர்களை வழக்கின் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு தான் தெரியும். வரைபடத்தில் நேமத்தான்பட்டி சாலை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவம் புளியமரத்தடி பேருந்து நிறுத்தம் அருகில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளதற்கு மேற்படி இடம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இறந்த நபர் அரண்மனை பட்டியில் இருந்து நேமத்தான்பட்டி நோக்கி சென்றுதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழிதடமும் வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சாலையானது 20 அடி சாலை ஆகும். பால்வண்டியின் அடையாளங்கள் முகப்பில் எழுதியிருந்த பெயர் குறித்த விபரங்கள் தெரியுமா என்றால் PKS பால்வண்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்தாரர் பாண்டியன் என்பவரை விசாரணை செய்ததாக பெயரும் அதில் கையொப்பம் சார்பு ஆய்வாளர் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே புகார்தாரர் கூடுதல் வாக்குமூலம் கொடுத்த போது மேற்படி சார்பு ஆய்வாளர் பெயரும் அதில் அவரே கையொப்பமும் செய்ததாக உள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் காயம்பட்ட நபர்கள், பால்வண்டி, இருசக்கர வாகனம் போன்றவற்றின் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் எந்த பாகம் நான்கு சக்கர வாகனத்தின் எந்த பாகத்தின் மீது மோதியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்கிறது நான்கு சக்கர வாகனம் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் இடது பக்கம் மோதியததாக விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்த கொண்டேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சார்பு ஆய்வாளரை எப்போது விசாரணை செய்தேன் என்றால் 21.07.2017.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.14 11:42:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.